பச்சிளம் குழந்தைகள் பிரிவு

# பச்சிளம் குழந்தைகள் பிரிவிற்கு வரவேற்கிறோம்

பெற்றோர்களுக்கான தகவல்கள்

## பச்சிளங்குழந்தை பராமரிப்பு பிரிவிற்கு வரவேற்கிறோம்

உங்களுக்கு புதிதாகப் பிறந்துள்ள குழந்தையுடன் நீங்கள் இங்கே இருக்க விரும்ப மாட்டீர்கள் என்பதை அறிவோம். உங்களுக்கு உதவ நாங்கள் இங்கே காத்திருக்கிறோம். உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் எங்களால் முடிந்த மிகச் சிறந்த கவனிப்பை வழங்குவோம்.

## ஒருங்கிணைந்த குடும்ப பராமரிப்பு

உங்கள் குழந்தையின் பராமரிப்பில் நீங்கள்தான் மிக முக்கியமான ஒரு அங்கமாகத் திகழ்கிறீர்கள். இங்கு என்ன நடைபெறுகிறது என்பதையும், உங்கள் குழந்தைக்கு நீங்கள் என்ன உதவிகள் செய்யலாம் என்பதையும் நீங்கள் தெளிவாக அறிந்துகொண்டுள்ளதை உறுதிசெய்ய விரும்புகிறோம்.

பகல், இரவு என நீங்கள் எப்போது வேண்டுமானாலும் உங்கள் குழந்தையுடன் உடனிருக்கலாம். என்ன நிகழ்ந்துகொண்டிருக்கிறது என்பதையோ அல்லது உங்கள் குழந்தையின் உடல்நிலை எப்படி இருக்கிறது என்பதையோ, நீங்கள் விரும்பும் நேரத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். உங்கள் குழந்தையைப் பராமரிக்கும் பணிகளில், இயன்றவரை நீங்கள் அதிக அளவில் ஈடுபட வேண்டும் என்று விரும்புகிறோம்.

## தகவல்தொடர்பு

ஆங்கிலம் உங்கள் விருப்பத்திற்குரிய முதல் மொழியாக இல்லாவிட்டால், நீங்கள் புரிந்துகொண்டு பேசக்கூடிய மொழியையே பயன்படுத்த முயற்சிப்போம். இதற்கு எங்களுக்கு உதவ, ஒரு மொழிபெயர்ப்பாளரை ஏற்பாடு செய்வோம்.

## வார்டு ரவுண்டும் குழுப்பணியும்

குழந்தையைப் பற்றிய கலந்துரையாடல்களில் நீங்களும் இருக்க வேண்டுமென விரும்புகிறோம்.

ஒவ்வொரு நாள் காலையிலும் வார்டு ரவுண்டு நடைபெறும், அப்போது மருத்துவக் குழுவினர் அந்தப் பிரிவில் உள்ள ஒவ்வொரு குழந்தையையும் நேரில் பார்வையிட்டு, அக்குழந்தைக்கான சிகிச்சைத் திட்டங்கள் குறித்து கலந்தாலோசிப்பார்கள். இது காலை 9:30 மணி முதல் 11:30 மணிக்குள் நடைபெறும். இச்சமயத்தில் உங்கள் குழந்தையுடன் நீங்களும் உடனிருக்கலாம். நீங்களும் உங்கள் குழந்தையும் எப்படி இருக்கிறீர்கள் என்பதை எங்களிடம் பகிர்ந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

## பயனுள்ள தொடர்பு எண்கள்

உங்களால் மருத்துவமனைக்கு வர இயலாவிட்டால், உங்கள் குழந்தையின் நிலை குறித்தும் அங்கு என்ன நடைபெறுகிறது என்பது குறித்தும் அறிந்துகொள்ள எங்களை அழைக்கலாம். உங்கள் தனிப்பட்ட விவரங்களைப் பாதுகாக்கும் பொருட்டு, உங்கள் குழந்தையைப் பற்றி உங்களிடம் மட்டுமே எங்களால் பேச இயலும்; உங்கள் நண்பர்களிடமோ அல்லது குடும்பத்தைச் சேர்ந்த பிற நபர்களிடமோ பேச இயலாது.

**வின்னிகாட் குழந்தை நலப் பிரிவு (செயின்ட் மேரீஸ்)**

| | |
|---|---|
| வரவேற்பறை | 020 3312 1103 |
| தீவிர சிகிச்சைப் பிரிவு | 020 3312 6294 |
| சிறப்பு சிகிச்சைப் பிரிவு 1 | 020 3312 5059 |
| சிறப்பு சிகிச்சைப் பிரிவு 2 | 020 3312 5776 |

**குயின் சார்லட் பச்சிளங்குழந்தைகள் பிரிவு**

| | |
|---|---|
| வரவேற்பு | 020 3313 5158 |
| தீவிர சிகிச்சைப் பிரிவு | 020 3313 3174 |
| சிறப்பு சிகிச்சைப் பிரிவு 1 | 020 3313 3908 |
| ஆதரவு குடும்ப செவிலியர் | 07810 557818 |

## கூடுதல் தகவல்கள்

உங்களுக்காகவும் உங்கள் குழந்தைக்காகவும் எங்களால் இயன்ற மிகச்சிறந்த பராமரிப்பை வழங்குவோம்.

ஏதேனும் விஷயம் குறித்து நீங்கள் கவலையாகவோ அல்லது அதிருப்தியாகவோ இருந்தால், எங்கள் பணியாளர் ஒருவரிடம் தெரிவியுங்கள். உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் மிகச்சிறந்த பராமரிப்பை வழங்குவதற்காக, நாங்கள் உங்களுடன் இணைந்து பணியாற்ற விரும்புகிறோம்.

## பல்வேறு வடிவங்கள்

இந்தச் சிற்றேடு உங்களுக்குப் பின்வரும் வடிவங்களில் தேவைப்பட்டால், பணியாளரிடம் கேட்டு வாங்கிக்கொள்ளகலாம்:

- எளிதில் வாசிக்கக்கூடிய வடிவம்
- பெரிய எழுத்துரு, பிரெய்லி அல்லது ஒலிப்பதிவு

பச்சிளம் குழந்தைகள் பிரிவு
வெளியிட்டது: ஏப்ரல் 2025
மறுஆய்வுத் தேதி: ஏப்ரல் 2028
குறிப்பு எண்:
© Imperial College Healthcare NHS Trust